களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Kalanjiyam - International Journal of Tamil Studies (KIRJTS)
*An Internationally Peer-Reviewed, Open Access Quarterly Journal*
*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# The Place of Siddha's Tradition in Intellectual Tradition Of Tamil Nadu

**J. Sekkizhar[1],**
[1]Ph.D Scholar, Department of Tamil, Central Univarsity of Tamil Nadu, Thiruvarur.
Email: sekkiizzhar@gmail.com
**Prof. Dr. S. Ravi[2],**
[2]Research Guide, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur.

**Abstract:**

Siddhhas are those who operated on a very essential intellectual platform in our Tamil society. They were people who worked in the intellectual domain from a very ancient period and contributed to society. Their philosophy begins right from the most ancient materialistic thought.This thought grew as the tantric philosophy of the feminine principle(Penmai Kotpaadu) when early humans began to practice agriculture, and was later greatly emphasized by a group of people who are referred to in Sanskrit as the Siddhas.Although the doctrine they proclaimed was destabilized by the attacks of the Vedic Religion, the Siddha medicine – a result of their principle – and their socio – equalitarian thoughts remain essential to society even today.This article explains the definition,origin,principles,the scientific research methodologies of the Siddhas and their social contributions regarding this Siddha tradition.

**Keywords** : *Materialism, Idealism,Agricultural Society,Tantric Philosophy, Siddha Philosophy, Intellectual Inquiry \ Research.*

**References:**

1. Mudaliar, Arunai Vadivel. Patthaam Thirumurai Urai. Part 1, 3rd ed., Gnanasambandam Pathippagam, 2014.
2. Kandasamy, S.N. Indhiya Thathuva Kalanjiyam. Vol. 3, 2nd ed., Meyyappan Pathippagam, 2016.
3. Kailasapathy, K. Oppiyal Ilakkiyam. Kalaichuvadu Publications, 2018.
4. Chidambaranar, Saami. Siddhargal Kanda Vignana Thathuvam. New Century Book House, 1961.
5. Perinban, Deva. Thamizhar Valartha Thathuvangal. 3rd ed., Bharathi Puththakalayam, n.d.
6. Mahalakshmi, T. Thirumandhiram Kaattum Vaazhviyal Nerigal. Ulaga Thamizharaychi Niruvanam, 2014.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM

# தமிழகச் சிந்தனை மரபில் சித்தர் நெறி பெறும் இடம்

**[1]ஜெ. சேக்கிழார்,**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

**[2]பேரா. முனைவர் ச. இரவி,**

தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

**ஆய்வுச் சுருக்கம்:**

சித்தர்கள் நம் தமிழ்ச்சமூகத்தின் மிக இன்றியமையாத அறிவுசார் தளத்தில் செயல்பட்டவர்கள் ஆவார்கள். அவர்கள் மிகப்பழங்காலத்திலேயே அறிவுசார் தளத்தில் செயல்பட்டுச் சமூகத்திற்கு ஆக்கப்பூர்வமாகப் பங்காற்றியவர்கள்.அவர்களுடைய நெறியானது மிகப்பண்டைய பொருள்முதல் வாதச் சிந்தனையிலிருந்தே தொடங்குகிறது.அது ஆதி மனிதன் வேளாண்மை செய்யத் தொடங்கியபோது பெண்மையக் கோட்பாட்டின் தாந்திரீகத் தத்துவமாக வளர்ந்து பின்பு 'சித்தர்' என்று வடமொழியில் அழைக்கப்படும் ஒரு குழுவினரால் பெரிய அளவில் வலியுறுத்தப்பெற்றது.இவர்கள் மொழிந்த கோட்பாடானது வைதீக சமயத்தின் தாக்குதலால் நிலைகுலைந்த போதிலும், அக்கோட்பாட்டின் விளைவாகிய சித்த மருத்துவமும், சமூகவியல் சமத்துவச் சிந்தனைகளும் இன்றுவரை சமூகத்திற்கு இன்றியமையாதவையாகின்றன.இத்தகைய சித்தர் நெறியின் வரையறை, தோற்றம், கொள்கை, சித்தர்களின் விஞ்ஞான ஆய்வு முறைகள்,அவர்களின் சமூகப் பங்களிப்பு முதலியவற்றை இக்கட்டுரை விளக்கியுள்ளது.

**திறவுச் சொற்கள்:** *பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம்,வேளாண்மைச் சமூகம்,தந்திர நெறி,சித்தர் நெறி,அறிவாராய்ச்சி.*

**முன்னுரை:**

'சித்தர் மரபு' என்பது தமிழகத்தின் மிகத் தொன்மையான மரபுகளுள் ஒன்றாகும். சித்தர்கள் அறிவு சார் தேடலுக்கும், அறிவாராய்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர்கள். இவர்களுடைய நெறியானது தனித்துவமானதாகும். மேலும் ஒரு தனித்தத்துவ மரபை ஒட்டியதாகும்.இது சித்தர் சித்தாந்தம் என்று சித்தர்களாலேயே சுட்டப்பெறுகின்றது.இந்தச் சித்தர் நெறியின் விளைவாகத் தோன்றியவையே தமிழருக்குரிய மருத்துவம், வானவியல்,உலோகவியல் போன்ற அறிவுசார் துறைகளாகும்.இந்தச் சித்தர் தத்துவத்தின் தோற்றமானது பண்டைய ஆதி மனிதனின் பொருள்முதல்வாதத்தின் நீட்சியாக அமைகிறது.மேலும், வேளாண்மைச் சமூகம் ஏற்படத் தொடங்கியதும் பொருள்முதல்வாதமானது பெண்மைய வழிபாடாகிய தாந்திரீகமாக வளர்ந்து பின்அதன் தொடர்ச்சியாகச் சித்தர் நெறியாக உருப்பெற்றுத் தமிழ்ச்சமூகத்தில் பல்வேறு பங்களிப்புகளை ஆற்றியது.அதைக் குறித்து இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**சித்தர்கள் அறிமுகம்:**

சித்தர்கள் நம் தமிழகத்தில் வாழ்ந்த மிகப் பழமையான அறிவியல் ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் ஆவர்.இவர்கள் மிகப்பண்டைய காலத்திலேயே எக்கருத்தையும் அறிந்தவுடன் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அலசி ஆராய்ந்து உண்மை கண்டபிறகே உறுதி செய்தவர்கள்.எனவே

கண்மூடித்தனமான சமய நம்பிக்கை, ஆச்சாரங்களுக்கு இவர்கள் பண்டைய காலம்முதலே எதிரானவர்களாக இருந்துவந்துள்ளனர்.இருப்பினும் இவர்களுடைய பாடல்களின் மூலம் இவர்கள் கடவுள் அன்பர்களாகவே அறியப்படுகின்றனர். இவர்கள் பழங்காலம் முதலே பொருள்முதல்வாதிகள் ஆவர்.பொருள்முதல் வாதம் என்பது ஆன்மா,உயிர்,இறை போன்ற நம்மால் உறுதியாக அறிய முடியாத பொருள்களைப் பற்றி ஆராயாமல் உலகம், உலகத்திலுள்ள பொருட்கள், சமூகம், நடைமுறையில் சமூகத்தில் உள்ள பிரச்சனைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவற்றை மையமிட்டு ஆராய்வதாகும்.கருத்துமுதல்வாதம் என்பது நம்மால் அறுதியிட்டு அறிய முடியாத ஆன்மா, இறை பற்றிய ஆய்வுகள் ஆகும்.இவ்வகையில் சித்தர்கள் அனைவரும் பொருள்முதல்வாதிகளே ஆவர்.அங்ஙனம் அவர்கள் பொருள்முதல்வாதிகளாக இருப்பதாலேதான், மருத்துவம்,சமூகம், விஞ்ஞானம்,உடல் நலம் சார்ந்த தேகப்பரீட்சை, வானவியல் ஆகிய துறைகளில் அவர்கள் பங்களித்துள்ளனர்.

“ சித்தர்கள் நம் தமிழகத்தில் மிகவும் பழமையான காலத்திலேயே அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டவர்கள் ஆவர். சமூகத்தின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்காக உழைத்தவர்கள் ஆவர்”[1].

இவ்வாறெல்லாம் அறிஞர்கள் சிலர் கூறியதற்கும் காரணம் சித்தர்கள் ஆரம்பக்காலந்தொட்டுப் பொருள்முதல்வாதிகளாக இருப்பதுதான்.

“ நம் தமிழகத்தில் பண்டைய காலத்தில் பொருள் முதல் வாத விஞ்ஞான ஆய்வுகளால் பல்வகை மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் போன்றவை உருவாகின. ஆனால் காலப்போக்கில் கருத்துமுதல்வாதம் சமூகத்தில் வலுப்பெற்றுப் பொருள் முதல்வாதம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. அத்தகைய காலத்தில் பொருள் முதல்வாதத்தை மீட்கத் தோன்றியர்களே சித்தர்கள் ஆவார்கள்.”[2] என்று சித்தர்களின் பாடல்கள் பிற்காலங்களில் பல்கிப்பெருகியதற்குக் காரணம் கூறுகிறார் க.கைலாசபதி.

**சித்தர் – சொற்பொருள் விளககம்:**

சித் என்ற வடசொல்லின் அடியாகப் பிறந்ததே சித்தர் என்ற சொல்லாகும்.சிலப்பதிகாரம் போன்ற பண்டைய தமிழ் இலக்கியங்களில் சித்தர் என்ற சொல்லுக்கு இணையாக அறிவர் என்ற சொல்லே கையாளப்பெற்றுள்ளது. சித்தன்னாவாசல் கல்வெட்டிலும் அறிவர் என்ற சொல் கையாளப்பெற்றுள்ளது. மேலும் தொல்காப்பியத்திலும் கற்பியல் மற்றும் செய்யுளியல்களில் தலைவன் தலைவியரின் ஊடலைத்தீர்க்கும் வாயிகளுள் ஒருவராக அறிவர் என்பவர் சுட்டப்பெறுகின்றனர். சித்தர்கள் அறிவு ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள்;அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தாத எதையும் ஏற்காதவர்கள்.இவையே சித்தர் அல்லது அறிவர் ஆகிய சொற்களுக்கான பொருளாகும்.இக்கருத்தையே சாமி.சிதம்பரனாரும் பின்வருமாறு கூறுகின்றார்.

‘ சித் – அறிவு. எனவே சித்தர் என்பதற்கு அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள்,மேதைகள்,பேரறிவு படைத்தவர்கள்,விஞ்ஞானிகள்,மெய்ஞ்ஞானிகள் என்றெல்லாம் பொருள்படும்.’[3]

மேலும் உலக உண்மையை உணர்ந்தவர்கள் என்ற பொருளும் சித்தர் என்ற சொல்லுக்கு உண்டு.அஃதாவது ஆன்ம ஞானம் பெற்றவர்கள் என்ற பொருளும் உண்டு.இவர்கள் உலக உண்மையைக் கண்டு தெளிந்து தங்களுடைய சமூகவியல் சார்ந்த பொருள்முதல்வாதச் சிந்தனைக்கும், ஆராய்ச்சிக்கும் துணையாகவே ஆன்ம ஈடேற்றத்தையும், ஆன்மீக ஞானத்தையும் கைக்கொண்டனரே



KALANJIYAM

தவிர, கருத்துமுதல்வாதத்தைச் சார்ந்துள்ள சமயவாதிகளைப் போல உலக வாழ்வைத் துறந்து முக்திநிலையை அடைவது போன்ற சிந்தனைகளைச் சித்தர்கள் தங்கள் ஆன்மீக ஞானத்தின் மையமாகக் கொள்ளவில்லை.இதைப் பின்வருமாறு தி.மகாலட்சுமி அவர்களும் குறிப்பிடுகிறார்.

'சித்தன் என்பவன் மெய் உணர்ந்தவன். முழுமை அடைந்தவன்.வாழுங் காலத்திலேயே கடவுளைக் கண்டு தெளிந்தவன்.இவர்கள் ஆன்மீக வாழ்வை முன்னுக்கு வைத்தனர்.உலக வாழ்வைப் பின்னுக்குத் தள்ளினர். இருப்பினும் உலக மக்கள் உடல், மன நலத்துடன் வாழ வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்கள்.'[4]

இவையே சித்தர்கள் பற்றிய விளக்கம் ஆகும்.

**சித்தர் மரபின் பழைமை:**

ஆதிகால மனிதனிடம் நாகரிகமும், பண்பாடும் வளர்ச்சியடைத் தொடங்கிய போது, பொருள்முதல்வாதக் கோட்பாடே மனிதனின் முதல் சிந்தனைக்களமாக விளங்கியது.மிகப்பிற்காலத்தில்தான் கருத்துமுதல்வாதச் சிந்தனைகள் எழத்தொடங்கின.எனவே சித்தர்களின் மையக்கோட்பாடாகிய பொருள்முதல்வாதம் மிகப்பழமை வாய்ந்தது எனலாம்.மேலும் உலகாயதச் சிந்தனையின் நீட்சி அல்லது அதன் தொடர்ச்சியே சித்தர் மரபாகும்.இத்தகைய பொருள்முதல்வாதக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட சித்தர் தத்துவம் மிகப் பழமையையுடையது என்பதற்குச் சங்க இலக்கியத்திலிருந்து டாக்டர்.சோ.ந.கந்தசாமி அவர்கள் காட்டும் சான்று முக்கியத்துவம் பெறுகின்றது.

' சித்தர் நெறியே தமிழகத்தின் முதல் நெறி என்றும் இன்றைய சமயங்களும், அவற்றின் நூல்களும் தோன்றுவதற்கு முன்பு சித்தர் நெறியே தமிழகத்தில் இருந்தது என்றும் கூறப்படுகிறது. சான்று: புறம் 214, பரிபாடல் 5 ஆகிய பாடல்களில் குறிப்பிடப்படும் மறுபிறப்பை ஏற்காதோர் சித்தர்களே ஆவர்.'[5] இவ்வாறு சோ.ந,கந்தசாமி குறிப்பிடுகிறார்.மேலும் தமிழ்நாட்டின் பொருள்முதல்வாதச் சிந்தனையின் விளைவாகத் தோன்றிய சித்த மருத்துவத்தின் பழமையைக் கொண்டும் தமிழகத்துச் சித்தர் மரபின் பழமையை அறியலாம். இதைச் சாமி.சிதம்பரனாரின் கூற்றும் துணை செய்கிறது.' சித்த மருத்துவத்தின் உன்னதமும், விரிவும் அது பதினெண் சித்தர்களுக்கு முன்பே வாழ்ந்த சித்தர்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதைக் காட்டுவதும்,சித்த மருத்துவம் காலம் கணிக்க முடியாதபடி பழமையுடையதாக இருப்பதும் சித்தர் மரபின் பழமைக்குச் சான்றுகள் ஆகின்றன.'[6] என்கிறார் அவர்.

**சித்தர் மரபின் தோற்றம்:**

மிகப்பழங்காலத்தில் வேட்டையாடுவதால் மட்டுமே உணவைப் பெற்று வாழ்ந்துவந்த மனிதர்கள் பிற்காலத்தில் தாங்களாகவே உணவை உற்பத்தி செய்யக்கூடிய வேளாண் சமூக நிலைக்கு மாறினர். இந்நிலையிலும் பண்டைய தாய்வழிச்சமூகப் பண்பாட்டின்படி பெண்களே வேளாண்மைத் தொழிலை ஏற்றுச் செய்யத் தொடங்கினர்.மேலும் அன்றைய சமூகம் தாய்வழிச் சமூகமாக இருந்ததால், வேளாண்மை பெண்களால் தான் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. எனவே அவர்களே நிலத்தைத் தோண்டுதல், பயிர்களைப் பயிரிடல் போன்றவற்றைச் செய்யலாயினர். இக்காரணத்தால் வேளாண் தொழில் சார் செயல்பாடுகள் அனைத்தும் பெண்ணின் கருவுறும் தன்மையோடு (இயற்கை ) இணைத்து

ஒப்பிடப்பட்டன.இதனால் பெண்களால் வேளாண் தொழிலுக்கு ஊக்கமிளிக்கும் மந்திரங்கள் உருவாக்கப்பட்டன.இங்ஙனம்,பெண் கருவுற்றுக் குழந்தை ஈனும் தன்மையோடு பயிரின் உற்பத்தி ஒப்பிடப்பட்டதால் மனித உடலில் இடம்பெறுபவை பேரண்டத்தின் முன்மாதிரி என்னும் கருத்தின் அடிப்படையில் இந்தக் பெண்களின் உடலும் உள்ளமும் எதனையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவையாகவும் ஆண்களின் உடலும் உள்ளமும் எதனையும் வெளிபடுத்தும் தன்மையுடையவையாகவும் அறிந்து அவ்விரு தன்மைகளும் இருபாலாருக்குள்ளும் இருப்பதையும் கண்டறிந்தனர். எதனையும் கற்றுக்கொள்ள அதனை உள்வாங்கக்கூடிய பெண் தன்மை தேவை என்பதால் அதன் அவசியத்தை அறிந்தவர்கள் தமக்குள் இருக்கும் பெண்மைத்தன்மையை அதிகரிக்கும் தந்திரப்பயிற்சியைக் கண்டறிந்தனர்.

இத்தந்திரப்ப்யிற்யின்படி ஆசனவாயின் மேற்பகுதி முதல் தலையுச்சி வரையுள்ள ஏழு சக்தி மையங்களில் ஆசனவாயின் மேற்பகுதியில் சுருண்டிருக்கும் பெண்மைச் சக்தியாகிய குண்டலினியை மேலெழுப்பி முதுகெலும்பின் வழியாகப் பிற பெண் சக்தி மையங்களை ஊடுருவச் செய்து மூளையை நோக்கிச் செலுத்தி ஆண் தன்மை முழுவதையும் தனதாக்கி ஆண்பெண் தன்மைகள் நீங்கி இரண்டும் ஒன்றாகக் கலந்த நிலைக்குச் செல்வதே தலையாய நோக்கமாகும்.மேலும்,இதனால் உடலும் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் பேரண்டத்தின் பாகமாகக் கொண்டு தன்னுள் இருக்கும் சக்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பேரண்டத்தின் சக்தியைக் கட்டுப்படுத்தலாம் என்றும்,அதே போல் பேரண்டத்தின் சக்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தனக்குள் இருப்பனவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்றும் அதற்கு மூச்சு பயன்படுவதையும் கண்டனர். இப்பயிற்சிகளால் உண்மையைக் கண்டு அண்டத்தைக் கட்டுப்படுத்துவதில் தேர்ச்சி பெற்றவர்களே சித்தர்கள் ஆவர்.இவர்கள் மந்திரம், யோகம், சோதிடம், வானில் பறப்பது,நீரில் மிதப்பது, நெருப்பினுள் புகுவது முதலிய செயல்களில் வல்லமை பெற்றிருந்தனர்.இவ்வாறு பெண்மைக் கோட்பாட்டிலிருந்து தந்திரப் பயிறசியாகிய தாந்திரீகமாக வளர்ந்து தோன்றியதே சித்தர்களின் நெறியாகும்.

இதனை தி. மகாலட்சுமி அவர்களும் தம்முடைய திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள் என்ற நூலில் விளக்கியுள்ளார்[7]. மேலும் ஆதி வேளாண் சமூகத்திலிருந்து தந்திரப் பயிற்சியாகிய தாந்திரீகக் கோட்பாடு வளர்ச்சியடைந்துள்ளது என்ற கருத்தை தேவ. பேரின்பன் அவர்களும் விரிவாக விளக்கியுள்ளார்கள்[8].

**சித்தர் நெறியின் அடிப்படைகள்:**

சித்தர்கள் ஊழ்வினைக் கோட்பாட்டை ஏற்கவில்லை.அவர்கள் மக்கள் என்றைக்கும் நோயின்றி வாழ முடியும் என்றும், சாகா நிலையை அடைய முடியும் என்றும் துன்பற்ற வாழ்வை அனைவராலும் வாழ முடியும் என்றும் கருதினர்.இன்றைய நவீன விஞ்ஞானிகளைப் போலவே அழியாத நிலையான ஆன்மா என ஒன்று உண்டு என்பதைச் சித்தர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.உடலும் உயிரும் வெவ்வேறானவை அன்று. உடலின்றேல் உயிரும் அழியும். எனவே உடலைப் பேணி ஓம்புதல் இன்றியமையாதது என்று சித்தர்கள் கருதினர்.

**“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்”**

**- திருமந்திரம்,211**

**“ஊனுடம்பு ஆலயம்”**

**- திருமந்திரம் 1823**

**“உறுதுணையாவது உயிரும் உடம்பும்”**

**- திருமந்திரம்,307.**

‘காயமே இது பொய்யடா’ என்பது போன்ற கருத்துகள் பிற்காலச் சித்தர்களின் பாடல்களில் தான் இடம்பெற்றன.மேலும் உடம்பினுள்ளே இருக்கின்ற சக்தியே பரமாத்மா என்பது சித்தர்களின் முடிவு.

**“உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்**

**உடம்பினில் உத்தமனைக் காண்”**

**- ஞானக்குறள், 11**

என்கிறது ஞானக்குறள்.

சித்தர்கள் சாதி, சமய,மொழி, இன வேறுபாடுகளையும் அவற்றால் விளையும் பூசல்களையும் அறவே வெறுத்தனர்.அவர்கள் சமத்துவத்தையும், சமரசத்தையும் பேண வலியுறுத்தினர்.இது சித்தர்களின் தலையாய கோட்பாடாகும்.

**“சமயபேதம் பலவான சாதி பேதங்கள்**
**சகத்தோர்க்கே யல்லாது சற்சாதுக் களுக்கோ**
**சிமயத்தி லேறினபேர் சித்த மாறுமோ**
**சித்தர்சித் தாந்தந்தேர்ந்த் தாடாய் பாம்பே”**

**- பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்,99**

என்கிறார் பாம்பாட்டிச் சித்தர் கூறுகிறார்.

**“சாதிப் பிரிவினிலே தீமூட்டுவோம்**
**சந்தை வெளியினில் கோல் நாட்டுவோம்”**

**- பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்,123**

**“பறைச்சி ஆவதேதடா**
**பனத்தி ஆவதேதடா**
**இறைச்சி தோல் எலும்பிலும்**
**இலக்கம் இட்டிருக்குதோ?”**

**- சிவ வாக்கியர் பாடல்கள், 38**

என்பது போன்ற பல்வேறு சித்தர் பாடல்கள் உள்ளன.

சித்தர்கள் அறிவாராய்ச்சிக்குப் பொருந்தாத எதையும் ஏற்பதில்லை.வேதம், புராணம், ஆகமம், இதிகாசம் என எவற்றையும் அவர்கள் கண்மூடித்தனமாக ஏற்பதில்லை.

**“சதுர்வேதம் ஆறுவகை சாஸ்தி ரம்பல**
**தந்திரம் புராணங்கலை சாற்று மாகமம்**
**விதம்வித மானவான வேறு நூல்களும்**
**வீணான நூல்களேயென் றாடாய் பாம்பே”**

**- பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்,98**

என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

சித்தர்கள் கண்மூடித்தனமான சடங்குகள் எவற்றையும் ஆதரிக்கவில்லை.அவற்றால் எவ்விதப்பயனும் இல்லை என்ற கருத்தையே கொண்டிருந்தனர்.அவர்கள் உடபினுள்ளே இருக்கின்ற ஆன்ம சக்தியை உணர்வதே அஞ்ஞானம் நீங்க வழி என்று கொண்டனர்.

**“உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி**
**உலகத்தின் மூடர்களுக்கு உண்டோ உணர்ச்சி**
**புளியிட்ட செம்பில் குற்றம் போமோ அஞ்ஞானம்**
**போகாது மூடர்க்கின் றாடாய் பாம்பே”**

**- பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்,92**

என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

**“நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே**
**சுற்றி வந்து மொணமொண என்று சொல்லு மந்திரம் ஏதடா**
**“நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்”**

**- சிவ வாக்கியர் பாடல்கள், 496.**

என்கிறார் சிவ வாக்கியர்.

சித்தர்கள் கருத்தியல் ரீதியாக உலகாயதர்களாகக் காணப்பட்டாலும் அவர்களின் பாடல்களில் கடவுளைத் துதிக்கும் பாடல்களும் இடம்பெறுகின்றன. இருப்பினும் அவர்களைச் சமய வாதிகளாகக் கொள்ள இடமில்லை.இதனைச் சாமி.சிதம்பரனார்,

“சித்தர்களின் பாடல்களிலை மேலோட்டமாகப் படிக்கும்போது அவர்கள் பக்திமான்களைப் போலவே அவர்கள் பக்திமான்களைப் போலவே வைதீக மதவாதிகள் போலவே பல தெய்வ உபாசிப்பவர்கள் போலவே காணப்படுகின்றனர்.ஆனால் சித்தர் பாடல்களை ஆழ்ந்து படித்தால், அவர்கள் வைதீக மதத்திற்கு எதிரானவர்களாகவே காணப்படுகின்றனர்.வைதீக மதக் கொள்கைகள் பலப்வற்றைத் தாக்குகின்றனர்.ஆனால் அவர்கள் நாத்திகர்கள் என்றோ உலகாயதர்கள் என்றோ வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளவில்லை.கடவுள் அன்பரகள் போலவே

காட்சியளிக்கின்றனர்.ஆயினும் சித்தர்களின் பாடல்களிலே உலகாயதத்தை - நாத்திகத்தைப் பற்றிய கண்டங்களும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது[9]."என்கிறார்.

**சித்தர்களின் விஞ்ஞான ஆராய்ச்சி:**

சித்தர்கள் பொருள்முதல்வாதக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதன் விளைவாக உடல் ஓம்பும் பொருட்டும், மக்களின் நல்வாழ்வின் பொருட்டும் பல்வேறு ,மருந்துகளைத் தயாரிக்க விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர்.அவர்கள் தங்களுடைய அறிவாராய்ச்சிகளால் ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றும் இரசவாதம் , பல்வகை நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைகளின் தன்மைகள், உடம்பின் தன்மைகள், உடல்நலச் சிக்கல்களைத் தீர்க்கும் சித்த மருத்துவம், மருந்து சேகரிக்கச் செல்லும் போது பயன்படக்கூடிய வானவியல் சாஸ்திரம் முதலியவற்றைக் கண்டறிந்தனர்.இதனைக் கீழ்வரும் க.கைலாசபதியின் கூற்றாலும் அறியலாம். 'சித்தர்களின் இரசவாதம் சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாகும். உலோக வகைகள், உப்பு வகைகள்,வேர் வகைகள்,பூ வகைகள்,முத்து,பவளம்,பிராணிகளின் உடலில் உள்ள கோரோசனை,கஸ்தூரி,மூத்திரம்,மலம் முதலியவற்றின் குணங்களைச் சித்தர்கள் கண்டுபிடித்திருப்பது சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பாகும்.பண்டங்களின் தன்மைகளை ஆராய்ந்து இன்ன பொருட்களைச் சேர்த்து இன்ன வகை மருந்துகளை உருவாக்கலாம் என்று கண்டனர்.ஒரு நோய்க்கு ஒரு மருந்து, பல நோய்களுக்கு ஒரு மருந்து, உட்கொள்ளும் மருந்து,உடம்பில் பூசிக் கொள்ளும் மருந்து,மூக்கினால் முகரும் மருந்து, நீண்ட காலம் வாழ மருந்து எனப்பல வகையான மருந்துகளைக் கண்டனர்.'[10]

**சித்தர்களின் ஆராய்ச்சி முறை:**

சித்தர்கள் எதனையும் ஆராய்ந்து அறிந்த பிறகே நம்பியவார்கள் ஆதாலால் தங்களுடைய அறிவாராய்ச்சியின் பொருட்டு அன்றைய காலத்திலேயே சமூகத்திலிருந்து விலகித் தனியே சோலைகளிலும், காடுகளிலும், மலைகளிலும் தங்கித் தியான, யோகப் பயிற்சிகளில் ஈடுபட்டுப் பல்வேறு சோதனைகளையும் மேற்கொண்டனர். மேலும் அவர்கள் அன்றைய காலத்திலேயே சோதனையின் பொருட்டுப் பல்வேறு கருவிகளையும் பயன்படுத்தினர்.இவற்றைக் கீழ்வரும் சாமி.சிதம்பரனார் மற்றும் க.கைலாசபதி ஆகிய இருவருடைய தனித்தனிக் கூற்றுகளால் அறியலாம்.

'பரிசோதனைக் கூடங்கள், கருவிகள் முதலியவை அன்றைய காலத்தில் இல்லை. எனவே சித்தர்கள் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் பல்வேறு ஆராய்ச்சிகளையும், சோதனைகளையும் நடத்தி முடிவு கண்டனர்.' என்கிறார் சாமி. சிதம்பரனார்[11].

'வைதீகத்துக்கு எதிராக உலக உண்மையை ஏற்றுக் கொண்ட சித்தர் விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைகளைச் செய்தனர். அவர்களின் அப்பிரகம், கந்தகம், பாதரசம் பற்றிய ஆய்வுகள் இரசாயன வளர்ச்சிக்கு வித்திட்டன. சித்தர் தம் ஆய்வுக்காகப் பல எந்திரங்களை வடிவமைத்தனர். உதாரணம்: தோல் எந்திரம்,சுவேதனி எந்திரம்,பதன எந்திரம், தூப எந்திரம் முதலியன.' என்கிறார் கைலாசபதி[12].

சித்தர்களின் எந்திரக் கண்டுபிடிப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அவர்கள் கண்டறிந்த கும்பமுறையைக் கூறலாம். இக் கும்பமுறையானது, சில தாதுக்களைக் குறிப்பிட்ட அளவில் கொண்டு சில உலோகங்களைப் பயன்படுத்தி ஒரு செயற்கையான குழந்தையை உருவாக்குவதாகும். இம்முறை

இன்றைய நவீன விஞ்ஞான முறையோடு மிகவும் ஒத்ததாக உள்ளது. இது குறித்து தி. மகாலட்சுமி 'திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்' என்ற தம் நூலில் 'தமிழில் மருத்துவ இலக்கியங்கள்' என்னும் வேறொரு நூலிலுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு விளக்குகிறார்.

" நாதம், விந்து, கந்தகம், ஆண் பெண் பாதரசங்கள் அடங்கிய கற்பத்துடன் மேற்சொன்ன பொருட்களில் ஒன்றாகிய செய நீரால் பாதரசம், கந்தகம், உப்பு ஆகிய மூன்றையும் வெண்ணையாக்கி, கற்பம் உண்டாக்க வேண்டும்.அதைக் கும்பம் போன்ற பாத்திரத்தில் வைத்து மூட வேண்டும்.கும்பத்தில் சீலைமண் செய்து கும்பத்தின் வாய்க்கு ஊசியால் இரண்டு மூன்று துளைகள் போட வேண்டும். பின் இருட்டறையில் 300 நாள் வைக்க வேண்டும்.300 நாள் ஆனதும் கும்பத்தில் குழந்தை உருவாகும். கற்ப மருந்துகளில் நாதம் விந்து ஆகியவை 4:3 எனும் விகிதத்தில் கலக்கப் பெற்றால் உருவாகும் குழந்தை ஆண் பெண் என்றாகும்.இம்முறையில் உருவாகும் குழந்தை மூன்றரை அடி உயரம் தான் வளரும். இம்முறையில் உருவான அகத்தியர் குள்ளமானவர். அதனால் தான் அகத்தியரைக் கும்பமுனி, கலசமுனி என அழைக்கின்றனர்.கலசத்தில் வைக்கப்பட்ட பொருட்களில் ஒன்றான கந்தகத்தின் பெயரே கந்தன் என்று முருகனைக் குறிப்பதாகக் கூறப்படுகின்றது."[13]

இவ்வாறு பல அறிஞர்களின் கருத்துக்களைக் கொண்டு சித்தர்களின் அன்றைய ஆராய்ச்சி முறைகளை அறியமுடிகிறது.

**முடிவுரை:**

பொருள்முதல்வாதத்தின் அடிப்படையாகத் தோன்றிய சித்தர் நெறி தமிழகத்தின் இடைக்காலத்தில் விளங்கிய சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், கண்மூடிச் சடங்குகளையும் கடுமையாகச் சாடினர். தம்முடைய ஆராய்ச்சிகளால் மருத்துவம், வானவியல், இரசவாதம் ஆகிய துறைகளில் பெரும்பங்காற்றியுள்ளனர். இருப்பினும் இடைக்காலத்தில் வைதீக சமயத்தின் தாக்குதலால் சித்தர் நெறி மக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெறாமல் போயிற்று.மேலும் சித்தர்கள் ஓர் அமைப்பாகத் திரளாததும் அவர்களின் கொள்கையின் தோல்விக்கு முக்கியக் காரணங்களாகும். இத்தகைய பல்வேறு நெருக்கடிகளையும் தோல்விகளையும் எதிர்கொண்ட சித்தர்களின் மருத்துவமும் சமூகவியல் சிந்தனைகளும் இன்று வரை தமிழ்ச்சமூகத்தில் நீங்கா இடத்தைப் பெற்ற வைதீக சமயத்தின் கருத்துமுதல்வாதத்துக்கு எதிரான நிலையான பொருள்முதல்வாதச் சிந்தனையின் விளைவுகளாகத் திகழ்ந்து வருகின்றன.

**சான்றெண் விளக்கம்:**


1. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,பக்.எண்:10
2. கைலாசபதி.க,ஒப்பியல் இலக்கியம்,கட்டுரை எண்:8, ' சித்தர் தத்துவம்', பக்.எண்:145,146,
3. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,பக்.எண்:15
4. மகாலட்சுமி.தி,திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்,பக்.எண்:17
5. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,பக்.எண்:40-41
6. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,பக்.எண்:17
7. மகாலட்சுமி.தி,திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்,பக்.எண்:1-4

8. பேரின்பன்.தேவ,தமிழர் வளர்த்த தத்துவங்கள்,பக்.எண்:126.
9. பேரின்பன்.தேவ,தமிழர் வளர்த்த தத்துவங்கள்,பக்.எண்:126,134,135.
10. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,பக்.எண்:28,29.
11. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,பக்.எண்:29
12. கைலாசபதி.க,ஒப்பியல் இலக்கியம்,கட்டுரை எண்:8, ‘ சித்தர் தத்துவம்’, பக்.எண்:152,153.
13. மகாலட்சுமி.தி,திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்,பக்.எண்:13,14

**துணை நூற்பட்டியல்:**

1. அருணை வடிவேல் முதலியார், பத்தாம் திருமுறை உரை,முதல் பாகம்,மூன்றாம் பதிப்பு, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம்,மயிலாடுதுறை,2014
2. கந்தசாமி.சோ.ந.டாக்டர்,இந்திய தத்துவ களஞ்சியம்,மூன்றாம் தொகுதி, இரண்டாம் பதிப்பு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2016
3. கைலாசபதி.க,ஒப்பியல் இலக்கியம்,காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோயில், 2018
4. சிதம்பரனார்.சாமி,சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை,1961.
5. பேரின்பன்.தேவ,தமிழர் வள்ர்த்த தத்துவங்கள்,மூன்றாம் பதிப்பு, பாரதி புத்தகாலயம்,சென்னை
6. மகாலட்சுமி.தி,திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,2014.

**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

KALANJIYAM